[9th March 1966

திரு. எம். எஸ். மணி : இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்பட்டு முதலாளிகள் மில்லை மூடிவிடுகிறபோது அரசாங்கம் மகாராஷ்டிர அரசாங்கம் செய்தது போல், அந்த மில்லை ஏற்று நடத்த முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி கனம் தொழிலமைச்சர் அவர்கள் முன்பே விளக்கிக் கூறியிருக்கிறார்கள். திறமையோடு நடத்தப்பட்ட ஒரு மில்லை அரசாங்கம் ஏற்று நடத்துவதில் பயன் இருக்கிறது. சரியாக நடக்காத மில்லை அரசாங்கம் ஏற்று நடத்துவதில் பயன் இல்லை. தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள என்ன செய்வது என்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் கவனித்துக் கொண்டுதான் வருகிறது.

திரு. செ. மாதவன் : இப்படி லாக் அவுட் செய்வது திறமையற்ற செயலின் காரணமாக இருக்கலாம். சில சமயங்களில் தொழிலாளர்களைப் பழி வாங்க வேண்டுமென்றும் செய்யலாம். அப்படிப்பட்ட நேரத்தில் மானேஜ்மெண்டை ஒர்க்கர்ஸினிடத்தில் ஒப்படைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தொழிலாளர்களைப் பழி வாங்குவதற்காகச் செய்ததா அல்லது திறமையின்மை காரணமாக மில்லை மூடும் நிலை ஏற்பட்டதா என்பதையெல்லாம் அப்போதைக்கப்போது அரசாங்கம் பரிசீலனை செய்து, தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. தொழிலாளர்களே மில்லை நடத்துவதாக இருந்தால் அதற்கு அவர்கள் முன் வந்து அதற்கு ஆற்றல் தங்களிடம் இருப்பதாகத் தெரிவித்தால் அரசாங்கம் கவனம் செலுத்தலாம்.

திரு. எம். எஸ். மணி : நமது அரசாங்கம் சோஷலிசத்தைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்க, மூடப்பட்ட மில்களை இன்றைய தினம் அரசாங்கம் ஏற்று நடத்தினால் அரசாங்கத்திற்கு நஷ்டம் வரும் என்று கருதுவது ஏன் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சோஷலிசம் என்பதைப்பற்றி அவரவர்களுக்கு வேறு வேறு கருத்து இருக்கிறது. இதையெல்லாம் எடுத்துக்கொண்டு ஆராய்ந்து அதற்கு விளக்கம் கொடுக்க முடியாது. பிரச்சினை இந்த மில் மூடப்பட்டதைப் பற்றியது. சீரான நிலையில் இல்லாத மில்லை அரசாங்கம் எடுத்துக் கொண்டு நடத்துவதில் பயன் இல்லை. தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் ஆலை மறுபடியும் நடக்க என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அது கவனிக்கப்பட்டு வருகிறது. இரண்டு மில் அதிபர்கள் இந்த மில்லை ஏற்று நடத்த பணம் சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். முதலீடு இப்போது இல்லை. அதை எப்படி நடத்துவது என்பதிலே கவனம் செலுத்திக்கொண்டு வருகிறார்கள்.

* 225 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government examined the representation, dated 3rd November 1965 sent to them by the Secretary of

Coimbatore District Mill Workers' Union, regarding partial closure of shifts in C.S. & W. Mills Ltd.; and

(b) if so, the steps taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) Yes, the representation has been examined by the Government. It is expected that the Mills would resume work shortly.

தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டம்

* 226 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) Workmen's Compensation கமிஷனர்களுக்கு பிராசிகியூஷன் அதிகாரம் கொடுக்க சட்டத்தைத் திருத்தும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) Sub-section (2) of Section 18-A of the Workmen's Compensation Act, 1923 already empowers the Commissioner for Workmen's Compensation to prosecute the defaulters for contravening the provisions specified in the said section. In view of this, the question of amending the Act for the said purpose does not arise.

MR. SPEAKER: Questions are over.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III.—CALLING ATTENTION TO MATTER REGARDING DETENU SRI UMANATH, M.P.

* திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, உங்களுடைய அனுமதியின் மீது இந்தச் சட்டசபை விதி 41-ன் படி கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கீழ்க்கண்ட விஷயத்தை நான் கொண்டு வர விரும்புகிறேன்.

பார்லிமென்ட் உறுப்பினரான கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கனம் உமாநாத் அவர்களைச் சென்னை சர்க்கார் கைது செய்து வைத்திருந்தும், பிறகு அவரை விடுதலை செய்த பிறகு அவர் தம்முடைய உரிமையாகிய பார்லிமென்ட் கூடத்திற்குச் செல்வதைத் தடை செய்திருப்பதாகவும், சென்னை சர்க்கார் அப்படிச் செய்யலாமா, செய்வது முறையா என்பது போன்ற வாதப் பிரதிவாதங்களை லோக் சபையில் எழுப்பி இருக்கிற காரணத்தால், இது ஒரு பார்லிமென்ட் உறுப்பினரின் உரிமை என்பது மட்டுமல்லாமல் சென்னை அல்லது மாநில சர்க்காரின் அதிகார வரம்பு, எல்லை முதலியவற்றை எல்லாம் கணிப்பதற்கு ஒரு காரணமாக இருப்பதாலும் இதைப்